[1975 மார்ச் 7

மயிலாப்பூர் சித்திரக்குளம்

*231 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரிலுள்ள சித்திரக்குளம் பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதைப் புதுப்பிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) சென்னை மயிலாப்பூரிலுள்ள சித்திரக்குளத்தை பழுது பார்க்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சென்னை மயிலாப்பூரிலுள்ள இந்த சித்திரக்குளம் நீண்டகாலமாகப் பழுது பார்க்கப்படாமலும், புதுப்பிக்கப்படாமலும் இருக்கிறது. இதனால் சுற்றுப்புற மக்களுக்குச் சுகாதாரக் கேடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இனிமேலாவது இதைப் பரிசிலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதைச் சுத்தம் செய்ய என்றுதான் 99 ஆண்டுகளுக்கு மாநகராட்சிக்குக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சுற்றுச் சுகாதார முறையிலே வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு நிலையை மாநகராட்சி ஆண்டாண்டு தோறும் நிர்வகித்து வருகிறார்கள். ஆனால் குளத்திற்குள்ளே இருக்கும் படிக்கட்டுகளைப் பழுது பார்க்க சுமார் 66,000 ரூபாய்க்கான ஒரு திட்டத்தை அறநிலையத்துறைக்கு அனுப்பியிருக்கிறோம். அறநிலையத் துறையினர், இது மாநகராட்சியின் பொறுப்பிலே குத்தகைக்கு இருப்பதால் அறநிலையத்துறை செலவு செய்ய முடியாது என்பதால் இதை மாநகராட்சியிலிருந்து அறநிலையத்துறைக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாநகராட்சியும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது, அறநிலையத் துறையும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, இது முடிந்தபிறகு உள்ளே படித்துறை கட்டுவது போன்ற ஏற்பாடுகள் இருக்கும். இப்பொழுது சுகாதார நிலைமைக்கு அவ்வளவு ஒன்றும் கேடாக இல்லாமல் மாநகராட்சி பார்த்துக் கொள்கிறது.